**கவனிக்க.-** 2006.04.28 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1444 - 2006 මැයි 05 වැනි සිකුරාදා- 2006.05.05

1444 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 374 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 378 |


**கவனிக்க.-** (i) இலங்கை மின்சார சபை (திருத்தம்) சட்டமூலம் 2006, ஏப்பிறல் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மின்சாரச் சீர்திருத்தம் (திருத்தம்) சட்டமூலம் 2006 ஏப்பிறல் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, மே 11 ஆந் தேதி வியாழக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஏப்பிறல் 28 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள்:**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டு பிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

B2-B 079126

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்களுக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2006, ஆனி 6 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2006.04.10

#### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | பஸ்பாகே | ஹாரிஸ்பத்துவ பிரிவின் மல்வாஹின்ன பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | உடுதும்பரை | உடுதும்பரை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | உடுநுவர | உடுநுவர மற்றும் யட்டிநுவர பிரிவின் வட்டதெனிய பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | உடுநுவர | உடுநுவர மற்றும் யட்டிநுவர பிரிவின் வெலம்பட பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | உடுநுவர | உடுநுவர மற்றும் யட்டிநுவர பிரிவின் எலமல்தெனிய பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | கங்கவட்ட கோறளை | கடவச்சதர மற்றும் கங்கவட்ட கோறளை கட்டுகஸ்தோட்டை பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | தும்பனை | தும்பனை பிரிவின் தெஹிதெனிய மடிகே பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |

5-12

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி -அநுராதபுர மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2006, ஆனி மாதம் 6 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2006.04.10

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| அநுராதபுரம் | ஹொரவப்பொத்தான | மஹபொத்தானை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹுருலு பலாத விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | கெக்கிராவ | மாமினியா கோறளை பிறப்பு, இறப்பு மற்றும் கலாகம் பலாத பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | நொச்சியாகம | துனுமடலாவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம் பலாத விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | நொச்சியாகம | கால்ல திவுல்வெவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம் பலாத பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | திறப்பனை | உலகல்ல தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹுருலு பலாத பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | கலென்பிந்துனுவெவ | சீவலிபுர பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹுருலு பலாத பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | நுவரகம்பலாத கிழக்கு | விஜயபுர பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம் பலாத பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | நுவரகம்பலாத கிழக்கு | நுவரகம்பலாத பிரிவின் மதவாச்சி பிரதேச மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அநுராதபுரம் |

5-13

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி -மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றன :

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2006, ஆனி மாதம் 6 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2006.04.10

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | வெலிகம | மிதிகம பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வெலிகம் கோறளை விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மாத்தறை. |
| மாத்தறை | வெலிகம | கொட்டவில பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வெலிகம் கோறளை விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மாத்தறை. |

5-14

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி -பொலன்னறுவை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றன :

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2006, ஆனி மாதம் 6 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2006.04.10

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பொலநறுவை | தமன்கடுவை | மெதபத்து தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தமன்கடுவை பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், பொலநறுவை. |

5-15

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வாழ்க்கைதொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை

***எந்திரவியற் தொழிநுட்பவியல் நிறுவகம் (முன்னர் தொ. ப. நி.) - கட்டுநாயக்கா***

*எந்திரவியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு (NDES) எந்திரவியல் சிறப்புப் பயிலுநர்களை ஆட்சேர்த்தல்-2006 குழு*

கட்டுநாயக்கா எந்திரவியற் தொழிநுட்பவியல் பயிற்சி நிறுவகத்தின் 2006 ஆம் குழுவுக்காக மேற்கூறிய கற்கை நெறிக்கு எந்திரவியற் சிறப்புப் பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. **அனுமதிக்கான கல்வித் தகைமைகள்.**- கீழ்க்குறிப்பிட்ட தகைமையுடைய அபேட்சகர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடை யோர் ஆவர் :-

1.1 ஒரே அமர்வில் க.பொ.த. (சா.த) பரீட்சையில் குறைந்தது 3 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி ;

அத்துடன்

1.2 (அ) க.பொ.த. (உ.த) (பழைய பாடத்திட்டம்) இல் ஒரே அமர்வில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களில் சித்தி ;

அல்லது

(ஆ) க.பொ.த. (உ.த) (பழைய பாடத்திட்டம்) இல் இரு அமர்வுகளில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகம் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் சித்தி ;

அல்லது

(இ) க.பொ.த. (உ.த) (புதியபாடத்திட்டம்) ஒரே அமர்வில் இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் சித்தி.

2. **வயது.**- 2006 திசெம்பர் 01 ஆந் திகதியன்று 18 வயதிற்கும் 25 வயதிற்கு இடைப்பட்டவர்களாயிருத்தல்.

3. **காலமும் பாடநெறியின் அட்டவணையும்.**- கீழே குறிப்பிட்ட வாறு, 73 வார (அண்ணளவாக) போதனைத் திட்டத்தையும் 135 வார (அண்ணளவாக) கைத்தொழில் பயிற்சியையும் கொண்ட நான்கு வருடத்துக்குரிய இரட்டைமுறை பாடநெறியாகும்.

| | |
|---|---|
| தொ. ப. நி. இல் அடிப்படைப் போதனைத் திட்டம் ( செறிவான ஆங்கிலம் உட்பட) | - 27 வாரங்கள் |
| கைத்தொழிலான அடிப்படைக் கைத்தொழில் பயிற்சி | - 39 வாரங்கள் |
| தொ. ப. நி. இல் பொது போதனைத் திட்டம் | - 23 வாரங்கள் |
| கைத்தொழிலான பொது கைத்தொழில் பயிற்சி | - 52 வாரங்கள் |
| தொ. ப. நி. இல் சிறப்புப் போதனைத்திட்டம் | - 23 வாரங்கள் |
| கைத்தொழிலான சிறப்புக் கைத்தொழிற் பயிற்சி | - 44 வாரங்கள் |

போதனைத் திட்டங்கள் தொழில்நுட்பவலர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கோட்பாடு போதனையையும் பாடநெறி வேலைப் பயிற்சியையும் உள்ளடக்கும்.

கைத்தொழில் பயிற்சித் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் தாபனங்களில் நடாத்தப்படுகின்றன.

4. இப்பாடநெறியின் கீழ் வழங்கப்படும் பிரதான கற்கைத் துறைகளும் சிறப்புத் துறைகளும் கீழே தரப்பட்டுள்ளன :-

(1) குடிசார் கட்டட அமைப்பு எந்திரவியல்
(2) குடிசார் பெருந்தெருக்கள் புகையிரத பாதை எந்திரவியல்
(3) குடிசார் நீர் சுற்றாடல் எந்திரவியல்
(4) இலத்திரனியல் எந்திரவியல்
(5) மின்வலு எந்திரவியல்
(6) தொலைத் தொடர்பு எந்திரவியல்
(7) தன்னசைவு எந்திரவியல்
(8) பொறிமுறை பொது எந்திரவியல்
(9) ஆழி எந்திரவியல்

(அ) ஆழி எந்திரவியல் பிரிவின் தரமுகாமைத்துவம், ஐ. எஸ். ஓ. 9001- 2000யின் நிபந்தனைக்கு அமைவானதாகும்.

(ஆ) ஆழி எந்திரவியற் பாடநெறி தொடர்பாக, இந்நிறுவனம் STCW, 95 வுடனும் இதன் திருத்தங்களுடனும் மற்றும் சருவதேச ஆழி அமைப்பின் (IMO) நிறைவேற்றத்தின் மாதிரி நெறியான 7.04 வுடனும் தொடர்பான இயங்கு மட்டத்திலான ஆழி எந்திரவியலின் பொறுப்பாணை, அறிவு விளங்கல், திறன் ஆகியவற்றை எதிர்கொள்ளும் வகையில், கல்வி போதனைகளையும் கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சி முறைகளையும் அளிக்கிறது.

5. **போதனா மொழி** - ஆங்கிலம்

6. **தொழிற்பயில் நிலை ஒப்பந்தம் :**

6.1 பயிற்சி தாபனத்திற்கும் பயிலுநருக்கும் இடையே பரஸ்பர கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும், பயிற்சியளிக்கும் தாபனத்துடனான ஒப்பந்தமொன்றுக்குள் தெரிவுசெய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் உட்படுத்தப்படுவார். பாடநெறி பூர்த்தியின் போது மீளளிக்கப்படக்கூடிய 5000 ரூபாவையை, பதிவின் போது, பயிலுநர் வைப்பாக்கல் வேண்டும்.

6.2 கைத்தொழிற் பயிற்சி விடயத்தில், பயிலுநர் தாபனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

6.3 பயிற்சி கால முடிவில் வேலைக்கான உத்தரவாதம் வழங்கப்படமாட்டாது.

6.4 பாடநெறியில் பயிலுநர் ஒருவர் பயில்வதற்கு பதியப்பட்டு பாடநெறி முடிவுறும் வரை ஆகக்குறைந்தது 80% வரவு தேவைப்பாடாகும். மேற்படிதேவைப்பாட்டை பூர்த்தி செய்யாத மாணவர் பரீட்சைக்குத் தோற்ற முடியதாததுடன் அவர் ஆட்சேர்க்கப்பட்ட குழுவில் இருந்து கல்வியை தொடர முடியாததுடன் அதற்கு பின்வரும் குழுவில் சேர்த்துக்கொள்ளப்படுவார்.

7. **சான்றிதழ் வழங்கல்.**- எந்திரவியல் தொழில் நிறுவகத்தின் பாடநெறியைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்தோருக்கு எந்திரவியல் விஞ்ஞானத்திலான தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

8. **தெரிவுசெய்யும் பிரமாணங்கள் :**

8.1 மேலே பந்தி 1 இல் தரப்பட்டுள்ள மிகக்குறைந்த அனுமதித் தகைமைளையும் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வயது வரையறைமுடைய எல்லா விண்ணப்பதாரிகளும் தகுதியுடையோர் ஆவர். தெரிவுகள் கீழே தரப்பட்டுள்ள முறையில் நடைபெறும்.

8.2 9.1யின்படி தகைமையான தேர்வுநாடிகள் ஆங்கில மொழி மூலமான உளச்சார்புச் சோதனைக்கான எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். (தகைமையான தேர்வு நாடிகளுக்குமுன் கூட்டிஅறிவிக்கப்படும்).

8.3 விருப்பத்துறை சிறப்பாக்கம் மற்றும் உளச்சார்பு சோதனையில் சித்திநிலை ஆகியவற்றின்அடிப்படையில் வேறுபட்டத்துறைகளுக்கும் சிறப்பாக்கங்களுக்கும் விண்ணப்பதாரியை தெரிவு செய்வதற்கு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

8.4 ஆழி எந்திரவியலுக்குத் தெரிவு செய்யப்பட்டோர் பதிவாக்கலுக்கு முன் தமது சொந்த செலவில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும்.

9. **விண்ணப்பங்கள் :**

9.1 விண்ணப்பங்களையும் மேலதிக தகவல்களையும் N.D.E.S. இணைய தளத்திலிருந்து (WWW.ndes.lk) பெற்றுக்கொள்ளலாம்.

9.2 விண்ணப்பப்படிவங்களை, 2006.06.20 ஆந் திதகி வரை ரூபா 50 ரூபா செலுத்தி கட்டுநாயக்க, டெம்பல் வீதியிலுள்ள எந்திரவியற் தொழிநுட்பவியல் நிறுவனத்தின் பதிவாளரிடமிருந்தும் ரூபா 50க்கான காசுக்கட்டளையை சுய முகவரியிட்ட முத்திரையுடனான 9" x 4" அளவிலான கடித உறையுடன் "பதிவாளர், எந்திரவியற் தொழிநுட்பவியல் நிறுவகம், டெம்பல் வீதி, கட்டுநாயக்க" என்ற முகவரிக்கு 2006.06.20 க்கு முன் அனுப்புவதன் மூலம் தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

9.3 மேலும் 2006.06.20 ஆந் திகதிவரை ரூபா 50 பணமாகச் செலுத்துவதன் மூலம் பின்வரும் அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் :-

(1) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, 971, சிறீ ஜயவர்த்தனபுர மாவத்தை, வெலிக்கடை, இராஜகிரிய. தொலைபேசி இல. : 011- 2863680, 011-8667435

(2) தொழிற்பயில்நிலைப் பயிற்சி நிறுவகம், இல. 581, காலி வீதி, கட்டுபெத்தை, மொறட்டுவ. தொலைபேசி இல. : 011- 2647393, 011-2641092.

(3) தன்னசைவுள்ள எந்திரவியல் பயிற்சி நிறுவகம், இல. 07, டாக்டர் டெனிஸ்டர், டீ சில்வா மாவத்தை, ஒறுகொடவத்தை, வெல்லம்பிட்டியா. தொலைபேசி இல. : 011- 2572977, 011-2532182.

(4) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, ஊவா மாகாணம், 288, குமாரசிங்க மாவத்தை, பதுளை. தொலைபேசி இல. : 055- 2222608.

(5) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, சப்பிரகமுவ மாகாணம், புதிய கொழும்பு வீதி, கல்லூரிச் சாலை புதிய நகரம், இரத்தினபுரி. தொலைபேசி இல. : 045- 2228667.

(6) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, தென் மாகாணம், இல. 27ஏ, திறந்த பல்கலைக்கழக வீதி, நூபே, மாத்தறை. தொலைபேசி இல. : 041-2226958.

(7) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மத்திய மாகாணம், இல. 108/2B,திவங்கபோதி மாவத்தை, கண்டி தொலைபேசி இல. : 081- 2201918.

(8) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, வட மத்திய மாகாணம், 2 ஆம் குறிச்சி, இல. 525/2, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொலைபேசி இல. : 025- 2225504.

(9) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, வடமேல் மாகாணம், (தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு அருகில்), நீர்கொழும்பு வீதி, மல்கடுவாவ, குருநாகல். தொலைபேசி இல. : 037- 2223789.

(10) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, வட மாகாணம், இல. 07, கோவில் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. : 021- 2222383.

(11) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, கிழக்கு மாகாணம், 161ஏ, யாசின் கட்டம், பிரதான வீதி, கல்முனை. 067-2229357.

(12) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மேல் மாகாணம், இல. 242, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05. தொலைபேசி இல. : 011- 2597671-2; 011-2587258.

9.4 மேற்கூறிய நிறுவகங்களில் இருந்து விண்ணப்பங்களைப்பெறும் விண்ணப்பதாரிகள், கீழே 9.6இல் விவரித்தபடி யாதேனும் மக்கள் வங்கிக்கிளையில் 200 ரூபாவை செலுத்தல் வேண்டும். விண்ணப்பத்தை சமர்பிக்கும் பொழுது வங்கிக் கொடுப்பனவு சிட்டை (Bank Paying Slip) இணைக்கப்படல் வேண்டும்.

9.5 இணையத்தளத்திலிருந்து விண்ணப்பங்களைப்பெறும் விண்ணப்பதாரிகள் 10.6இன் விபரப்படி 250 ரூபா செழுத்தல் வேண்டும்.

9.6 கொடுப்பனவுப் பற்றுச்சீட்டு கீழ்வருவனவற்றைச் சேர்த்து சரியாகப் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும் :-

(1) கிளைக் குறியீடும் கணக்கு இலக்கமும் : 0174-1010089204

(2) வரவு அறிவுறுத்தல்-தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, நுகேகொடை மக்கள் வங்கியிலுள்ள 1010089204 இலக்க சேகரிப்புக் கணக்குக்கு வரவாக்குதலுக்கு.

(3) விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும்.

9.7 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களுடன் வங்கியின் தகவுடைய அலுவலரால் கையொப்பமிடப்பட்ட கொடுப்பனவுத் துண்டோடு இணைக்கப்பட்ட படிவத்தையும் பதிவுத் தபாலில் "பணிப்பாளர் / அதிபர், எந்திரவியல் தொழில்நுட்பவியல் பயிற்சி நிறுவனம், டெம்பல் வீதி, கட்டுநாயக்கா" என்னும் முகவரிக்கு 2006, யூன் 22 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9.8 அரசாங்க தொழிநுட்ப கல்லூரிகளில் பல்கலைக்கழகங்களில் டிப்ளோமா பாடநெறியினை அல்லது பட்டப் படிப்பினை முழு நேரமாக மேற்கொள்வோர் அல்லது மேற்கொண்டோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர் ஆவர்.

9.9 விண்ணப்பத்துடன் சான்றிதழ்களையோ அவற்றின் பிரதிகளையோ அனுப்பலாகாது.

9.10 விண்ணப்பப்பத்தினைப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

9.11 மேற்படி பந்தி 9.2 தொடர்பான காசுக்கட்டளை "கணக்காளர், எந்திரவியல் தொழில்நுட்பவியல் பயிற்சி நிறுவகம்" என்பவரின் பெயருக்கு கட்டுநாயக்கா அஞ்சலகத்தில் மாற்றக்கூடியதாய் எழுதப்படல் வேண்டும்.

10. அஞ்சலில் விண்ணப்பத்திற்கு ஏற்படக்கூடிய தாமதம் அல்லது தொலைந்து போதலுக்கு தொ. ப. நி. பொறுப்பாளியல்ல எனவே, முன்கூட்டியே விண்ணப்பத்தை அஞ்சலிடவும்.

தலைவர்,
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை,

971, சிறீ ஜயவர்த்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய.

5-16

---

**கல்வி அமைச்சு - உயர் கல்விப் பிரிவு**

ஜப்பான் (மொன்புகாகாகுஷோ) பட்டப் படிப்பிற்கான புலமைப்பரிசில் - 2007

2007 கல்வியாண்டிற்கென ஜப்பான் அரசு வழங்கும் பட்டப் படிப்பிற்கான புலமைப்பரிசில்களுக்காக தகுதியுடைய இலங்கை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொதுத் தகுதித் தேவைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் -

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 2007.04.01 ஆந் திகதிக்கு 17 - 21 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் துறை தொடர்பான பாடங்களில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழி தொடர்பான நல்ல அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.

(உ) நல்ல தேகாரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பதாரிகள் எவரும் அரச அல்லது அரச நிறுவனம் ஒன்றின் ஊழியராக இருத்தல் கூடாது.

(எ) விண்ணப்பதாரி தற்போதும் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றிலோ பாடநெறி ஒன்றிற்குத் தெரிவு செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது.

(ஏ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் வேளையில் இந்நாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப் படிப்பு ஒன்றினை மேற்கொள்வதற்குப் பதிவு செய்த நிலையிலுள்ள எந்தவொரு மாணவரும் பெயர் குறிக்கப்படுவதற்குத் தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

***குறிப்பு***.- ஜப்பான் மொழியைப் பாடநெறி ஒன்றாகக் கற்றுக்கொண்ட மாணவர்களைத் தவிர்ந்த ஏனைய மாணவர்களுக்கு ஜப்பான் மொழி தொடர்பான அறிவு இருக்க வேண்டிய அவசியமில்லை.

*1.* ***ஜப்பான் (மொன்புகாகாகுஷோ) - பட்டப்படிப்பு புலமைப்பரிசில்***

*1.1* ***கற்கைத் துறைகள் :***

(அ) சமூக விஞ்ஞானம், மானிடவியல், சட்டம், அரசியல் விஞ்ஞானம், பொருளியல் விஞ்ஞானம், வியாபார முகாமைத்துவம் கல்வி, சமூக விஞ்ஞானம், இலக்கியம், சரித்திரம் மற்றும் ஜப்பான் மொழி.

இயற்கை விஞ்ஞானம் "பீ" - விவசாய விஞ்ஞானம்
இயற்கை விஞ்ஞானம் "சீ" - மருத்துவ விஞ்ஞானம்

விண்ணப்பதாரிகள் ஜப்பான் மொழியில் பாடநெறிகளைக் கற்க ஆயத்தமாக இருக்க வேண்டும். ஜப்பான் மொழி தொடர்பான அறிவு முதல் வருடத்தில் வழங்கப்படும்.

*1.2* ***தேர்ந்தெடுத்தல்***.- விண்ணப்பதாரிகள் இலங்கையின் ஜப்பான் தூதரகத்தின் மூலம் நடத்தப்படும் போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின்படியே தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பரீட்சை 2006 யூலை, ஓகத்து மாதங்களில் நடத்தப்படும். வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரிகளின் மத்தியில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற திறமை அடிப்படையில் குறும் பட்டியல் இடப்பட்டு அதனடிப்படிடையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்படும் 20 விண்ணப்பதாரிகளின் பெயர்கள் கல்வி அமைச்சினால் பரீட்சைக்கென சமர்ப்பிக்கப்படும்.

*1.3* ***பரீட்சைக்கான பாடங்கள் :***

(அ) சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் துறைக்கு விண்ணப்பம் செய்த விண்ணப்பதாரிகள் நான்கு பாடங்களுக்குத் தோற்ற வேண்டும்.

அவையாவன - கணிதம், ஆங்கிலம், உலக சரித்திரம், ஜப்பான் மொழி.

(ஆ) இயற்கை விஞ்ஞானம் "ஏ", "பி", "சீ" என்பனவற்றிற்கு விண்ணப்பம் செய்த விண்ணப்பதாரிகள் ஐந்து பாடங்களுக்குத் தோற்ற வேண்டும்.

அவையாவன - கணிதம், ஆங்கில மொழி, ஜப்பான் மொழி என்பவற்றோடு பௌதிக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள்.

பௌதிக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் என்பவற்றில் தேர்ந்தெடுக்கப்படும் பாடங்கள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்:-

இயற்கை விஞ்ஞானம் "ஏ" - பௌதிக விஞ்ஞானம் மற்றும் இரசாயன விஞ்ஞானம்

இயற்கை விஞ்ஞானம் "பீ" - இரசாயன விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம்

**குறிப்பு**.- கணிதம் தொடர்பான பரீட்சையானது எமது நாட்டின் க. பொ. த. உயர் தர இணைந்த கணித வினாத்தாள்களினை ஒத்திருக்கும்.

1.4 ***அளிப்புகள் :***

(அ) ஜப்பான் நாட்டிற்குச் செல்வதற்கும் திரும்பி வருவதற்குமான விமான பிரயாண வசதிகள்
(ஆ) மாதாந்த கொடுப்பனவு
(இ) வரவுக் கொடுப்பனவு
(ஈ) அனுமதிப் பரீட்சைக் கட்டணங்கள் பாடநெறிகளுக்கான கட்டணங்கள் என்பவற்றிலிருந்து விடுவிப்பு
(உ) தங்குமிட வசதிகள்

(அ) இலிருந்து (உ) வரையான செலவுகளை ஜப்பான் அரசு பொறுப்பேற்கும். ஜப்பானிற்குச் சென்றவுடன் மேற்கொள்ளவேண்டிய அவசர செலவுகளுக்காக விண்ணப்பதாரி 1500 அமெரிக்க டொலர்களைத் தம்முடன் கொண்டு வரல் வேண்டும்.

2. **ஜப்பான் (மொன்புகாகாகுஷோ) - தொழில் நுட்பக் கல்லூரி :**

2.1 ***கற்கைத் துறைகள் :***

1 ஆம் பிரிவு - இயந்திரப் பொறியியல் விஞ்ஞானம்

2 ஆம் பிரிவு - மின் மற்றும் மின்னியல் பொறியியல் விஞ்ஞானம்

3 ஆம் பிரிவு - தகவல் தொடர்பாடல் மற்றும் வலையமைப்புப் பொறியியல் விஞ்ஞானம்

4 ஆம் பிரிவு - திண்மப் பொறியியல் விஞ்ஞானம்

5 ஆம் பிரிவு - வாஸ்து விஞ்ஞானம் சிவில் பொறியியல் விஞ்ஞானம்

6 ஆம் பிரிவு - கடற் பொறியியல் விஞ்ஞானம்

விண்ணப்பதாரிகள் ஜப்பான் மொழியில் கற்கை நெறிகளைத் தொடர ஆயத்தமான இருத்தல் வேண்டும். முதல் வருடத்தில் ஜப்பான் மொழி தொடர்பான அறிவு பெற்றுக்கொடுக்கப்படும்.

2.2 ***தேர்ந்தெடுத்தல்.-*** விண்ணப்பதாரிகள் இலங்கையில் ஜப்பான் தூதரகத்தினால் நடத்தப்படும் இரண்டு பாடங்களான (கணிதம் மற்றும் பௌதிக விஞ்ஞானம் அல்லது இரசாயன விஞ்ஞானம்) போன்ற பாடங்களின் பெறுபேறுகளைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பரீட்சையானது 2006 யூலை, ஓகத்து மாதங்களில் நடத்தப்படும். வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் குறும் பட்டியலிடப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதன் மூலம் 35 விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சினால் பெயர் குறிக்கப்பட்டு போட்டிப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்படுவர்.

***குறிப்பு.-*** கணித பாடம் தொடர்பான வினாத்தாள் நம் நாட்டின் க. பொ. த. உயர் தர இணைந்த கணித வினாத்தாளை ஒத்திருக்கும்.

2.3 ***அளிப்புகள் :***

(அ) ஜப்பான் நாட்டிற்குச் செல்வதற்கும் திரும்பி வருவதற்குமான விமான பிரயாண வசதிகள்
(ஆ) மாதாந்த கொடுப்பனவு
(இ) வரவுக் கொடுப்பனவு
(ஈ) அனுமதிப் பரீட்சைக் கட்டணங்கள் பாடநெறிகளுக்கான கட்டணங்கள் என்பவற்றிலிருந்து விடுவிப்பு
(உ) தங்குமிட வசதிகள்

(அ) இலிருந்து (உ) வரையான செலவுகளை ஜப்பான் அரசு பொறுப்பேற்கும். ஜப்பானிற்குச் சென்றவுடன் மேற்கொள்ளவேண்டிய அவசர செலவுகளுக்காக விண்ணப்பதாரி 1500 அமெரிக்க டொலர்களைத் தம்முடன் கொண்டு வரல் வேண்டும்.

3. **விண்ணப்பங்கள் :**

(அ) சகல விண்ணப்பப்படிவங்களும் இங்கு காண்பிக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கொப்ப A4 தாளில் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தில் தமது விருப்புத் தெரிவிற்கேற்ப கற்கைத் துறையை இறங்கு வரிசையில் குறிப்பிடல் வேண்டும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றிய தடவைகளுக்கேற்றவாறு க. பொ. த. (உ. த.) பெறுபேறுகளை விண்ணப்பத்தில் தனித்தனியாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் தாங்கள் பெற்றுக் கொண்ட 'இசற்' புள்ளி மற்றும ஒவ்வொரு

பாடத்திலும் பெறப்பட்ட தரத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 2005 ஆம ஆண்டு க. பொ. த. (உ. த.) பரீட்சையில் அமர்ந்த விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொண்ட 'இசற்' புள்ளிகளை குறிப்பிடல் வேண்டும்.

(ஈ) 10 ரூபா பெறுமதியான முத்திரை, விண்ணப்பத்தில் இந்நோக்கங்களுக்காக தரப்பட்டுள்ள கூட்டில் ஒடடப்பட்டு கையொப்பமிடப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்பட வேண்டும்.

(உ) கடைசித் திகதி : 2006.05.31 ஆந் திகதி ஆகும்.

(ஊ) இவ்வறிவித்தலின் நிபந்தனைகள் முன்னறிவிப்பு எதுவுமின்றி புலமைப்பரிசில் வழங்கப்படும் நாட்டின் விருப்பத்தின் பேரில் மாற்றம் செய்யப்படலாம்.

(எ) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி பெயர் குறித்ததன் பின்னர் புலமைப்பரிசிலை நிராகரிப்பார் எனில் அவர் வேறெந்த புலமைப்பரிசில் தொடர்பாகவும் எதிர்காலத்தில் கவனத்திற்கொள்ளப்படமாட்டார்.

(ஏ) விண்ணப்பப்படிவத்தைத் தாங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் புலமைப்பரிசிலின் பெயர் தெளிவாகக் குறிக்கப்படல் வேண்டும்.

உதா : ஜப்பான் (மொன்புகாகாகுஷோ) புலமைப்பரிசில் 2007 - பட்டப்படிப்பு
ஜப்பான் (மொன்புகாகாகுஷோ) புலமைப்பரிசில் 2007 - தொழில்நுட்பக் கல்லூரி

(ஐ) உடன்படிக்கை.- தேர்ந்தெடுக்கப்படும் சகல விண்ணப்பதாரியும் புலமைப்பரிசிலுக்காக நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் இலங்கை அரசுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக உடன்படிக்கை ஒன்றிற்கு உள்ளாக வேண்டும்:-

(i) குறிப்பிட்ட பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து மீண்டும் நாட்டிற்குத் திரும்புவதற்கும்,

(ii) பாடநெறியைக் கற்றுப் பூர்த்தி செய்ததன் பின்னர் இலங்கை அரசினால் நியமிக்கப்படும் ஏதாவதொரு கால வரையறையில் இலங்கை அரசாங்கத்துக்குக் கீழ் சேவை புரிவதற்கும்,

(iii) தமது உடன்படிக்கையில் காணப்படும் சட்டங்கள் நியதிகள் என்பவற்றிற்கு அமைவாக செயல்பட முடியாத சந்தர்ப்பத்தில் புலமைப்பரிசிலின் முழுப் பெறுமதியினையும் இலங்கை அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்தவும் உறுதியளிக்க வேண்டும்.

(ஒ) விண்ணப்பப்படிவங்களை அவை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு கீழே காணப்படும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்க வேண்டும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

செயலாளர்,
கல்வி அமைச்சு,
உயர் கல்விப் பிரிவு,
18, வோட் இடம்,
கொழும்பு 7.

| முத்திரைக் கூடு |
|---|

| புலமைப்பரிசிலின் பெயர் ...................................... |
|---|

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

***உயர் கல்விப் பிரிவு***

ஜப்பான் (மொன்புகாகாகுஷோ) புலமைப்பரிசில் - 2007

1. முழுப் பெயர் :-----.
முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

2. முகவரி :-----.
தொலைபேசி இல. :-----. மாவட்டம் :-----.
(முக்கியம்) தேசிய அடையாள அட்டை இல. :-----.

3. பிறந்த திகதி :-----.
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

4. 2007.04.01 ஆந் திகதிக்கு வயது :-----.
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

5. நீர் இலங்கைப் பிரசையா ? :-----.

6. திருமணமானவர்/திருமணமாகாதவர் :-----.

7. பிறந்த இடம் :-----.

8. தாம் விரும்பிய பாடநெறி/பாடநெறிகள்/கல்வித்துறை :-----.

9. விண்ணப்பதாரியின் குடும்ப அங்கத்தவர்கள் எவராவது பெற்றுள்ள புலமைப்பரிசில்கள் தொடர்பான விபரங்கள் (இருப்பின்) :-----.

| தன்மை | நாடு | அளிக்கப்பட்ட திகதி | விண்ணப்பதாரிக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்குமுள்ள உறவு முறை |
|---|---|---|---|
| .................... | .......................... | .............................. | ............................................................................................ |

10. கல்வித் தகைமைகள் :-

| பரீட்சையின் பெயர் | வருடமும் மாதமும் | பாடசாலை/ கல்லூரி | சுட்டிலக்கம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|---|
| க. பொ. த. (சா. த.) | | | | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8.<br>9.<br>10. | |
| க. பொ. த. (உ. த.) | | | | 1.<br>2.<br>3.<br>4. | |
| பெற்ற மொத்தப் புள்ளிகள்/Z Score | | | | | |

11. ஆங்கில மொழியில் சித்தியடைந்துள்ள அதிகூடிய பரீட்சை :-----.

12. நீர் தற்பொழுதும் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஏதாவதொரு பல்கலைக்கழகம் ஒன்றில் பாடநெறி ஒன்றிற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது கற்கும் ஒருவரா ?.
பதில் ஆம் எனில், தயவு செய்து விபரங்களைத் தரவும் :-----.

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவை எனவும் எந்தவொரு தகவலையும் மறைக்கவில்லை எனவும் உறுதியளிக்கிறேன். இத்தகவல்கள் பிழையானதென தெரியவருமிடத்து தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் எனில் அதற்குத் தகுதியற்றவனாவேன் என்றும் தேர்ந்தெடுத்தன் பின்னர் எனில் புலமைப்பரிசில் வாபஸ் பெறப்படும் எனவும் நான் அறிவேன்.

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

5-25
B 3 – B 079259

**கல்வி அமைச்சு**

*நியூசிலாந்து, பொதுநலவமைப்பு புலமைப்பரிசில்கள் மற்றும் உயர் புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள் - 2007*

பொதுநலவமைப்பு புலமைப்பிரிசில்கள் மற்றும் உயர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் நியூசிலாந்து அரசினால் வழங்கப்படவுள்ள பட்டப்பின் படிப்பிற்கான புலமைப்பரிசில்களுக்கென தகுதியான விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்புலமைப்பரிசில்களானது 2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

2. இப்புலமைப்பரிசில் மூலம் இலங்கை மாணவர்களுக்கு உயர் கற்கை நெறிகளைத் தொடரவும் ஆய்வுகளைத் தொடரவும் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும். கற்கை நடவடிக்கைகளை ஆய்வுகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து இலங்கைக்குத் திரும்பி வந்து இந்நாட்டிற்கு குறிப்பிடத்தக்க சேவைப் பங்களிப்பினைப் பெற்றுத் தருவர் என நம்பப்படும் மூளைசாலிகளுக்கே இப்புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

3. **கற்கைத் துறைகள்**.- இப்புலமைப்பரிசில்களுக்கான கற்கைத் துறைகள் மட்டுப்படுத்தப்படவில்லை. எனினும் கீழ்வரும் கற்கைத் துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

| | |
|---|---|
| பராமரிக்கக்கூடிய கிராமிய வாழ்வாதாரம் | - கால்நடைகள், காட்டியலும் மீன்பிடியும், தோட்டச் செய்கை |
| * கல்வி | - (முன்பிள்ளைப் பராய கல்வி, இரு மொழிக்கல்வி, கல்வி முகாமைத்துவம்) |
| * ஆரம்ப சுகாதாரம் | - |
| * நிர்வாகம் | - (பொது நிர்வாகம், அரச துறை முகாமைத்துவம்) |
| * வர்த்தகமும் அபிவிருத்தியும் | - |
| * முரண்பாடு தவிர்த்தலும் மீள் நிர்மாணித்தலும் | - |
| * சுற்றாடல் கற்கைகள் | - |

* உயர் பாதுகாப்பு தொற்றுநோயிலிருந்து விலக்கி வைத்தல் சுத்திகரிப்பு மற்றும் பூண்டு சுத்திகரிப்பு நியமங்கள் தாவர மற்றும் விலங்கு சுகாதாரம்

* உணவுப் பாதுகாப்பு உணவுத்தரம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம்

சுற்றுலாத்துறை முகாமைத்துவம் பொருள் - சுற்றுலாத்துறை

விவசாய வியாபார அபிவிருத்தி வருமான உற்பத்தி போக்குகளும் கிராமிய சேவைகளும்

4. **முடிவுறுத்தல்**.- துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், உரிய அதிகாரிகளின் அனுமதியின்றி வகுப்புகளுக்கோ விடுதிக்கோ வராதிருத்தல், படிப்பில் முன்னேற்றம் காணப்படாமை பரீட்சையில் சித்தியடையாமை போன்ற காரணங்களுக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் எந்த வேளையிலும் புலமைப்பரிசில் முடிவுறுத்தப்படலாம். அப்போது புலமைப்பரிசில் பெற்றவர் தமது சொந்தச் செலவில் தாயகம் திரும்புமாறு கோரப்படுவார்.

5. **புலமைப்பரிசில் அளிப்பு நியதிகள்**.- புலமைப்பரிசில் அளிப்புகளுக்குப் பின்வரும் நன்மைகள் உள்ளடக்கப்படும்.

(அ) நியூசிலாந்து நாட்டிற்குச் செல்வதட்கும் படிப்பு முடிந்து இலங்கை திரும்புவதற்கும் மாணவர் சலுகை அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிற விமானக் கட்டணங்கள் மற்றும் புலமைப்பரிசில் பெறப்பட முன்னர் செய்த பயணங்களின் செலவு என்பன கொடுக்கப்படமாட்டாது. புலமைப்பரிசில் பெற்றோரில் தங்கியிருப்போருக்கும் கட்டணங்கள் எதுவும் செலுத்தப்படமாட்டாது.

(ஆ) பிரத்தியேக பராமரிப்புப்படி

(இ) அனுமதிக்கப்பட்ட கற்கை நெறி மற்றும் பரீட்சைக் கட்டணங்கள்

(ஈ) தேவைப்படுமிடத்து புத்தகங்கள் உபகரணங்களுக்கான கொடுப்பனவு

(உ) நியூசிலாந்து நாட்டிற்குள் அனுமதிக்கப்பட்ட கல்வி தொடர்பான பிரயாணச் செலவுகள்

6. **பொதுத் தகுதித் தேவைகள் :**

(அ) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது : 2006.05.21 ஆந் திகதிக்கு 45 வயதிற்கு மேற்படாதிருத்தல்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது இரண்டாம் வகுப்பில் (உயர்) சிறப்புப் பட்டத்தினைப் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) நியூசிலாந்து அல்லது அவுஸ்திரேலியா அரசாங்கத்தினால் 24 மாதங்களுக்குள் அளிக்கப்பட்ட எந்தவொரு புலமைப்பரிசிலையும் ஏற்றுக்கொண்டவரல்லாதிருத்தல்.

(உ) ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். இதற்கு IELTS அல்லது TOEFL பரீட்சைகளுக்குத் தோற்றி உயர் புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) அரசாங்க திணைக்களம் பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றின் நிரந்தர ஊழியராக இருத்தல் வேண்டும். (குறிப்பு (ii) மற்றும் (iii) இனைப் பார்க்கவும்)

(எ) விண்ணப்பதாரிகள் :

* சமகாலத்தில் வேறெந்த புலமைப்பரிசிலையும் பெற்றிருக்கக்கூடாது.

* பூரணகால பட்டப்பின் படிப்பு இருவழிக்கல்வியில் ஈடுபடாதிருத்தல்.

* ஒரே தகைமை இருமுறைகள் ஏற்படாதிருக்கும் பொருட்டு விண்ணப்பதாரிகள் உயர் கல்வி மட்டத்தில் அல்லது அம்மட்டத்தின் வேறு தகைமைகளைப் பூர்த்தி செய்யாதவராக இருக்க வேண்டும். உத்தேச கல்வி மட்டமானது தற்போது அவர்கள் பெற்றிருக்கும் தகைமைகளுக்கு மேல் மட்டத்திலான தகைமையாக இருத்தல் வேண்டும்.

**குறிப்புகள் :**

(i) பட்டப்பின்படிப்புத் தகைமையைக் கொண்டிருப்போரும் மேலே 06 (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைப் பெற்றிருக்க வேண்டும்.

(ii) தற்காலிக நிரந்தரமற்ற அல்லது ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வகிப்பவர்கள் அல்லது வேலையில்லாதிருப்போரின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

(iii) பட்டப் படிப்புத் தகைமை பெற்றதன் பின்னர் தமது பதவியில் நிரந்தரமாக்கப்படவேண்டிய நிலையிலுள்ள தகுதிகாண் நிலையைச் சேர்ந்த ஒருவர் இப்புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவர் இது தொடர்பாக விண்ணப்பத்தின் 15 ஆம் கூண்டில் குறிப்பிட வேண்டும்.

7. **விண்ணப்பங்கள் :**

(அ) ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் கீழே மாதிரியாகத் தரப்பட்ட விண்ணப்பப்படிவத்தின்படி தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொது நலவமைப்புப் பட்டப்பின் படிப்பிற்கான புலமைப்பரிசில்கள் - நியூசிலாந்து 2007" என்ற வாசகங்கள் தெளிவான எழுத்தில் எழுதப்படவோ அல்லது தட்டச்சில் பொறிக்கப்படவோ வேண்டும்.

(இ) ஒரு விண்ணப்பதாரி ஒரு கற்கை நெறிக்கு ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 10 இற்கான முத்திரை இணைக்கப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் இதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் முத்திரைக் கூண்டில் முத்திரையோ முத்திரைகளையோ ஒட்டி விண்ணப்பதாரி அதன் மேல் தமது கையொப்பத்தினை இட்டு மேற்படி முத்திரையை அல்லது முத்திரைகளைச் செல்லுபடியற்றதாக்க வேண்டும்.

(உ) சேவையில் உள்ளோர் தமது விண்ணப்பத்தைத் தமது நிறுவனத் தலைவரினூடாக அனுப்பாதவிடத்து அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எனவே அவர்கள் விண்ணப்பத்தின் 15 ஆம் கூண்டிலுள்ள சான்றிதழை உரிய முறையில் பூர்த்தி செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

(ஊ) இலங்கைக் குடியரசுடன் அல்லது அரச துறை சார் நிறுவனம் ஒன்றுடன் குறிப்பிட்ட காலத்திற்கு பணியாற்றுவதற்கு முறி அல்லது உடன்படிக்கை செய்துகொண்டுள்ள விண்ணப்பதாரி ஒருவர் அத்தகைய முறியில் அல்லது உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட காலம் 2006.05.21 ஆந் திகதிக்கு முடிவுற்றிருந்து அந்த ஒப்பந்தத்தில் அல்லது முறியில் மற்றெல்லாக் கட்டுப்பாடுகளையும் முற்றாக நிறைவேற்றி இருந்தால் அன்றி விண்ணப்பதாரியின் விண்ணப்பம் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(எ) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையானதென தெரியவருமிடத்து சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரி தகுதியற்றவராவார். தெரிவிற்குப் பின்னர் தெரியவருமிடத்து அவரது புலமைப்பரிசில் வாபஸ் பெறப்படும்.

(ஏ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி.- 2006.05.21 ஆந் திகதி பி. ப. 4.00 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தினத்திற்கு முன்னர் விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு,
உயர் கல்விப் பிரிவு,
இல. 18, வோட் இடம்,
கொழும்பு 7.

(ஐ) சரியான முறையில் அனுப்பி வைக்கப்படாத ஏதாவதொரு முறையில் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

8. **நேர்முகப் பரீட்சை.**- தகுதிபெற்ற விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் கொழும்பில் குறிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்க வேண்டும். இந்த நேர்முகப் பரீட்சையின்போது கல்விச் சான்றிதழ்கள் தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் மற்றும் தனது தகுதியை சான்றுப்படுத்தும் ஏனைய ஆவணச் சான்றிதழ்கள் என்பவற்றின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் பிரயாணச் செலவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

**முக்கிய குறிப்பு.**- இந்த வருடத்திற்கு ECE சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவசியமில்லை.

9. **மருத்துவப் பரிசோதனை.**- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நியூசிலாந்து நாட்டில் தமது கற்கை நெறியை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல் உள ஆரோக்கியத்துடன் உள்ளாரா என்பதனை அறிந்துகொள்வதற்கு நியூசிலாந்து நாட்டின் குடிவரவு அதிகாரிகளினால் நியமிக்கப்படும் மருத்துவ சபையால் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனைகளுக்குத் தோற்றி அதில் சித்தியடைய வேண்டும்.

10. **புலமைப்பரிசிலுக்குப் பெயர் குறித்தல்.**- புலமைப் பரிசிலுக்காக விண்ணப்பதாரி ஒருவர் பெயர் குறிக்கப்படுதலை அவருக்குப் புலமைப்பரிசில் வழங்கப்பட்டதாகக் கருதலாகாது. பெயர் குறித்தல் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறைகள் தொடர்பான முழுப் பொறுப்பும் நியூசிலாந்து அதிகாரிகளினாலேயே மேற்கொள்ளப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி ஒருவர் தமது பெயர் குறித்தலை ஏற்றுக்கொள்ள மறுக்குமிடத்து அல்லது பெயர் குறித்ததன் பின் புலமைப்பரிசிலை ஏற்றுக்கொள்ள மறுக்குமிடத்து எதிர்காலத்தில் எந்தவொரு புலமைப்பரிசிலுக்கும் தகுதியற்றவரெனக் கருதப்படுவார்.

11. **விடுமுறை.**- புலமைப் பரிசிலை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு விடுமுறை வழங்கலானது தாபனக் கோவை ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் விடுமுறைக்கு விண்ணப்பிக்கும்போது நடைமுறையிலுள்ள திணைக்கள விதிகளுக்கு ஒழுங்குகளுக்கு உட்பட்டதாகும்.

12. **உடன்படிக்கை.**- தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் அவர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் இலங்கை அரசுடனான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டும். அதில் ஏனையவற்றுடன் பின்வருவனவற்றையும் பொறுப்பேற்றல் வேண்டும்;

(அ) குறித்த கற்கை நெறியை உண்மையாகவும் ஊக்கத்தோடும் பின்பற்றி வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தல்;

(ஆ) கற்கை நெறியைப் பூர்த்தி செய்த பின் வேண்டப்படுமிடத்து குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்திற்கு இலங்கை அரசிற்கு சேவை செய்தல்;

(இ) ஒப்பந்த நியதிகள் நிபந்தனைகளுக்கு இணங்க செயற்படத் தவறுமிடத்து புலமைப்பரிசில் தொடர்பான முழுச்செலவையும் (அரசாங்க உத்தியோகத்தர் எனில் சம்பளம் படிகள், கட்டணங்கள் உட்பட புலமைப் பரிசிலுக்காக இலங்கைக் குடியரசும் புலமைப்பரிசில் அளிப்பு முகவர் நிலையமும் செய்த எல்லாச் செலவுகளையும்) இலங்கைக் குடியரசிற்கு மீளச் செலுத்த உறுதியளித்தல்.

விண்ணப்பதாரிகள் எவராவது தேர்ந்தெடுப்பது தொடர்பாக ஏதேனும் ஒரு வகையில் ஆதரவு தேட முற்படுவது மேற்படி புலமைப்பரிசில் தொடர்பாக அவரைத் தேர்ந்தெடுப்பது தகுதியற்றவராக்கி விடும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு,
உயல் கல்விப் பிரிவு,

இல. 18, வோட் இடம்,
கொழும்பு 7.

| ரூபா 10 இற்கான முத்திரைக் கூடு |
|---|

| இல. (அலுவலக உபயோகத்திற்கு) |
|---|

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

***நியூசிலாந்து, பொதுநலவமைப்பு புலமைப்பரிசில்கள் மற்றும் உயர் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள் - 2007***

1. (அ) முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) :-----.
(ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

2. முகவரி :-----.
தொலைபேசி இல. :-----.

3. பிறந்த திகதி :-----.
ஆண்டு:-----. மாதம் :-----. திகதி :-----.

2006.05.21 ஆந் திகதிக்கு வயது :-----.
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

4. நீர் இலங்கைப் பிரசையா ? :-----.

5. விவாகமானவரா? ஆகாதவரா ? தாரமிழந்தவரா ? :-----.

6. கல்வி, தொழில், தொழில் நுட்பத் தகுதிகள் :-----.

| பரீட்சையின் பெயர் | வருடமும் மாதமும் | நிறுவனம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|
| | | | | |

7. தற்போதைய தொழில் :-----.

| நிறுவனத்தின் பெயர் | திணைக்களம் | பதவி | முதல் நியமனத் திகதி |
|---|---|---|---|
| | | | |

8. நீர் அராசங்க பல்கலைக்கழக கூட்டுத்தாபன ஊழியராயின் :-----.

(அ) உமது பதவி நிரந்தரமானதா தற்காலிகமானதா ? :-----.

(ஆ) நிரந்தரமானதெனில் பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா ? :-----.

(இ) பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ள கடித இலக்கம், திகதி, வழங்கிய உத்தியோகத்தர் :-----.

9. கற்க விரும்பும் துறை அல்லது பாடநெறி :-----.

10. இலங்கை அரசுடன் அல்லது நிதி உதவி பெறும் வேறு நிறுவனங்களுடன் கைச்சாத்திட்டிருக்கும் முறி அல்லது உடன்படிக்கை ஏதும் இருப்பின் அது பற்றிய விபரங்கள் :-----.

11. இதற்கு முன்னர் புலமைப்பரிசில் பெற்று அல்லது கல்விச் சுற்றுலா போன்றவற்றிற்காக வெளிநாடு சென்றிருப்பின் அது பற்றிய விப ரம் :-----.

12. தேர்ச்சி பெற்றுள்ள ஆங்கில மொழி தொடர்பான அதியுயர் பரீட்சை :-----.

13. ஆராய்ச்சி தொடர்பான தகவல்கள் அல்லது வெளியீடுகள் ஏதுமிருப்பின் :-----.

14. வேறு விடயங்கள் :-----.

இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் அத்தியாவசியத் தகவல் எதையும் மறைக்கவில்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன். என்னைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை என்றும் தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கும் பட்சத்தில் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்றும் தெரிவிற்குப் பின் தெரியவந்தால் எனது புலமைப் பரிசில் வாபஸ் பெறப்படும் என்பதை அறிவேன் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

15. விண்ணப்பதாரி அரசாங்க நிதியில் உதவி பெறும் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்தவராயின் :

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:**

(1) (அ) இப்புலமைப்பரிசில் மூலம் வழங்கப்படும் பயிற்சி இந்நிறுவனத்திற்கு அவசியமானது/* அவசியமற்றது.

(ஆ) விண்ணப்பதாரியினால் 8, 9, 11 ஆம் கூண்டுகளில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் அவரின் பிரத்தியேக அறிக்கைகளுடன் சரிபார்க்கப்பட்டது. அவை சரியானவை கீழே குறிக்கப்பட்டுள்ளவாறு திருத்தப்படவேண்டியவை.

(இ) விண்ணப்பதாரி தமது பதவியில் ........................................... ஆந் திகதி நிரந்தரம் ஆக்கப்பட்டார் என்றும்

(ஈ) புலமைப்பரிசிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/*முடியாது.

(உ) விண்ணப்பதாரிக்கு சம்பளத்துடனான லீவு/சம்பளமற்ற லீவு வழங்க முடியும்/*முடியாது.

(2) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) :-----.

(3) வேறு விடயங்கள் :-----.

.............................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோக முத்திரையுடன்)

நிறுவனத்தின் பெயர் :-----.
திகதி :-----.

(இச்சான்றிதழ் நிறுவனத் தலைவரினால் கையொப்பம் இடப்படல் வேண்டும்.)

* தேவையற்ற சொற்களைக் கீறிவிடவும்.

5-88

## இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பு II ஆந் தரத்திலுள்ள அலுவலர்களுக்கு முதல் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2006

இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான முதல் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2006 ஆம் ஆண்டு ஓகத்து மாதத்தில் கொழும்பில் நடத்தப்படுமெனவும், இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2006, யூன் 05 ஆந் திகதி எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. **பரீட்சைத் திட்டம்**.– கீழே தரப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய விதத்தில் இவ்வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை அமைந்திருக்கும்.

(i) திட்டமிடற் கோட்பாடுகள், முறையியல், திட்டவியல் நிறுவனங்கள், நிதி மற்றும் நிர்வாகம் – நேரம் 3 மணி – 100 புள்ளிகள்

(ii) பொருளாதாரப் பகுப்பாய்வும் புள்ளிவிபரவியலும் – நேரம் 3 மணி – 100 புள்ளிகள்

(iii) கருத்திட்டத் திட்டமிடல் – நேரம் 3 மணி – 100 புள்ளிகள்

(iv) ஆங்கில மொழி – நேரம் 3 மணி – 100 புள்ளிகள்

**குறிப்பு**.– (அ) ஓர் அலுவலர் தமது விருப்பப்படி ஒரே தடவையில் அல்லது பல தடவைகளில் சகல வினாத்தாள்களுக்கும் தோற்ற முடியும்.

(ஆ) ஒரு பரீட்சார்த்தி சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினத்தாளிலும் 40% புள்ளிகளையோ அல்லது அதற்குக் கூடுதலாகவோ பெற்றிருக்க வேண்டும்.

3. **பாடங்கள் :**

(i) *திட்டமிடற்கோட்பாடுகள், முறையியல், திட்டவியல் நிறுவனங்கள், நிதி மற்றும் நிர்வாகம்*

*பகுதி I*

(அ) தேசிய இலக்குகளும் முன்னுரிமை விடயங்களும் அவற்றை எய்துவதற்கான கொள்கை அமைப்பும் நிகழ்ச்சித் திட்டங்களும்.

(ஆ) தேசிய திட்டமிடலுக்கான முறையியல், திட்டமிடலில் உள்ள பாரிய பிரச்சினைகள், பொது மக்கள் பங்களிப்பு, மூலவளங்களைத் திரட்டுதலும் அவற்றின் ஒதுக்கீடும், அரசு சாரா நிறுவனங்களின் பங்கு.

(இ) தேசிய திட்டமிடலின் தன்மையும் தரவுகளின் மூலவளம், அவற்றைச் சேகரித்தல், முறைப்படுத்தல், சமர்ப்பித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், வெளிக்கள மதிப்பீடுகள், புலனாய்வுகள், குடிநிலைப் புள்ளியியல் கருத்துக்கள், பொருளாதார நோக்குகளும் கொள்கைப் பகுப்பாய்வும்.

*பகுதி II*

(அ) *அரசாங்க நிதிப் பிரமாணங்கள்* – I ஆவது காண்டம் (X ஆவது அத்தியாயம் தவிர்ந்ததாக)

(ஆ) நடப்பு வருட மதிப்பீடுகள் :
உ – ம் : அவற்றை வரவு செலவுத் தலைப்புகளின் கீழும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழும் தயாரித்தல், நிதிசார் முறைமைகளின் ஒதுக்கீட்டுச் சட்டங்களும் குறைநிரப்பு மதிப்பீடுகளும்.

(இ) அலுவலக மற்றும் வெளிக்கள ஒழுங்கமைப்பும் முறைமைகளும்.

(ஈ) தாபனக் கோவையின் I, II, III, IV, V, VI, VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

(ii) *பொருளாதாரப் பகுப்பாய்வும் புள்ளிவிபரவியலும் :*

(அ) உற்பத்தி மற்றும் விநியோகக் கொள்கைகளுக்குக் குறிப்பாகக் கவனம் செலுத்தி, பொருளாதாரக் கோட்பாடுகள்.

(ஆ) நாணய மற்றும் வங்கித் தொழில் முறைமைகள், சர்வதேச நிதியும் வியாபாரமும்.

(இ) நிதிசார், நாணய வியாபாரம் மற்றும் கட்டணம் கொள்கைகளிலும், ஏனைய கொள்கைகளினதும் பகுப்பாய்வு.

(ஈ) இலங்கையின் பொருளாதார அமைப்பு.

(உ) பொருளாதார மீளாய்வு.

(ஊ) தொழில்நுட்ப ரீதியாகத் தொழில் திறன் பெற்ற மற்றும் பெறாத ஆள்வலு மற்றும் வெளிநாட்டு உதவியும் ஆதரவும் உட்பட ஏனைய மூலவளங்கள், அவற்றின் பயன்பாடு என்பன பற்றிய மதிப்பீடு.

(எ) பொருளாதார மற்றும் சமூக முன்மதிப்பீடு.

(ஏ) பொருளாதாரப் பகுப்பாய்விலும் திட்டமிடலிலும் பயன்படுத்தப்படும் அடிப்படைப் புள்ளிவிபரக் கருத்துக்களும், நுணுக்கங்களும்.

(ஐ) நன்மை/ ஆகுசெலவுப் பகுப்பாய்வு அம்சங்கள்

(iii) *கருத்திட்டத் திட்டமிடல் :*

(அ) திட்டமிடல் – கருத்திட்டங்களைக் கண்டறிதலும், வரையறுத்தலும், கருத்திட்ட உருவாக்க நெறிகள், இடவமைப்பு மற்றும் தொழில் நுட்பம் தொடர்பான கட்டளைகளும் தேர்ச்சியும் ஆகுசெலவையும் நலன்களையும் மதிப்பீடு செய்தல், தொழில்நுட்ப, நிதிசார் மற்றும் பொருளாதாரப் பகுப்பாய்வு.

(ஆ) கருத்திட்டங்களை அமுலாக்கல் – கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் முறையாகவும் நேரமறிந்தும் அமுலாக்கல் – விரிவான வேலைத் திட்டங்களையும் அமுலாக்கல் அட்டவணைகளையும் தயாரித்தல் – கணிப்பும் முன்னேற்றக் கட்டுப்பாட்டு வரைபடங்களும் ஒன்றிணைப்பும் தொடர்ந்து செயற்படுத்தலும்.

(iv) ஆங்கில மொழி.- இலங்கை திட்டமிடல் சேவையின் அலுவலர்கள் தங்களது கடமைகளைச் செய்வதற்குத் தேவையான ஆங்கில அறிவைப் பரிசோதிக்கும் விதத்தில் இந்த வினாத்தாள் அமைந்திருக்கும்.

4. இவ்வறிவித்தலின் இறுதியில் இப் பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள், தங்கள் சொந்த விண்ணப்பப்படிவங்களைக் கண்டிப்பாக இம் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் போன்று தயாரிக்குமாறு வேண்டப் படுகிறார்கள். விண்ணப்பப்படிவங்கள் ஒரு A4 அளவு தாளில் (வேறு அளவினதான தாளிலன்று) பரீட்சார்த்தியினால் தயாரிக்கப்படுதல் வேண்டும். இலக்கம் ஒன்றிலிருந்து பத்து வரையிலான விபரங்கள் முதல் பக்கத்திலும் மிகுதி விபரங்கள் அடுத்த பக்கத்திலுமாக ஒரு தாளின் இரு பக்கத்திலும் விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவர்களூடாக (பிரதேச செயலாளர் அலுவலகம் எனின், பிரதேச செயலாளர் ஊடாக) "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், நிறுவனங்கள்/வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் 2006, யூன் 5 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு முகவரியிடப்பட்டு விண்ணப்பம் வைக்கப்பட்டுள்ள காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் அல்லது பூர்த்தி செய்யப்படாத எந்தவொரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அரச கரும மொழிகள் கொள்கையின் பொருட்டு 'புதிதாகச் சேர்ந்தோர்' எனக் கருதப்படும் அலுவலர்கள், அரச கரும மொழியில் அல்லது அவர்கள் ஆட்சேர்ப்புப் பெற்ற மொழியாகிய தமிழ்/ஆங்கில மொழியில் தமது விண்ணப்பங்களைத் தயாரித்து அம்மொழியில் அவற்றை நிரப்பிச் சமர்ப்பிக்க முடியும்.

6. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசிகளுடன் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அத்தோடு பரீட்சை நடைபெறும் திகதி குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலொன்றும் பிரசுரிக்கப்படும். பரீட்சைத் திகதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதி அட்டையைப் பெறாவிடின், அவர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், நிறுவனங்கள்/வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு உடன் காலதாமதமின்றித் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். (தந்தி முகவரி எக்ஸாம்ஸ், பத்தரமுல்லை) அவ்வாறு தொடர்புகொள்ளும்போது பின்வரும் தகவல்களையும் அறிவித்தல் வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;

(ii) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;

(iii) முழு அஞ்சல் முகவரி ;

(iv) விண்ணப்பம் அனுப்பிய அஞ்சல் அலுவலகமும், பதிவிலக்கமும், திகதியும்.

7. **அடையாள அட்டை**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) செல்லுபடியான ஒரு கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) ;

(ii) ஆட்பதிவுத் திணைக்களம் வழங்கிய அடையாள அட்டை.

மேற்கூறியவைகளில் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் பரீட்சார்த்த நிலை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் நிராகரிக்கப்படுவதற்கு அவர் அதிகாரம் கொண்டிருப்பார்.

8. பரீட்சைக் கட்டணங்கள்.- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் அடிப்படையில் பரீட்சைக் கட்டணங்கள் அறவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது :

| | பரீட்சைக் கட்டணம் | ரூ. சதம் |
|---|---|---|
| (அ) | முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கட்டணம் அறவிடப்படமாட்டாது | - |
| (ஆ) | அதன் பின்னர் ஒவ்வோர் அமர்வுக்கும் முழுப் பரீட்சைக்கு | 115.00 |
| (இ) | ஒரு பாடத்திற்கு | 75.00 |

பரீட்சைக் கட்டணங்கள் அரசிறை முத்திரைகளாகச் செலுத்தப்பட்டு அவற்றின் மீது பரீட்சார்த்தி கையொப்பமிட்டு அவற்றைப் பெறுமதி நீக்கஞ் செய்தல் வேண்டும்.

9. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்பெறும். பரீட்சார்த்திகள் பரீட்சை நடத்துவதற்காகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்பட்ட விதிகளுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ் வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் ஒழுங்கு விதிகளும் இந்தப் பரீட்சைக்கும் செல்லுபடியாகும்.

10. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவர்களுக்குமான, தங்கள் திணைக்கள/ நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்குப் பரீட்சைக்குச் சமூகமளிப்பதற்குத் திணைக்கள/ நிறுவனத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படல் வேண்டும்.

11. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் இலங்கை திட்டமிடற் சேவைச் சபையின் தற்றுணிபின் படி முடிவு செய்யப்படும்.

என். மதநாயக்கா,
செயலாளர்,
இலங்கை திட்டமிடற் சேவைச் சபை.

இலங்கை திட்டமிடற் சேவைச் சபை அலுவலகம்,
நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1,
2006.04.20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைத் திட்டமிடற் சேவைச் சபை**

*இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பு II ஆந் தரத்திலுள்ள அலுவலர்களுக்கு முதல் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2006*

| சுட்டிலக்கம் :-----. |
|---|

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :-

| | |
|---|---|
| சிங்களம் | - 2 |
| தமிழ் | - 3 |
| ஆங்கிலம் | - 4 |

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

1. (அ) பெயர் முதலெழுத்துக்களுடன் பெயர் (Mr./Mrs/Miss) :--.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
உ-ம் :- Mr./Mrs/Miss :- SILVA, B. A.

1.1 முழுப் பெயர் :-----.
(சிங்களத்தில்/ தமிழில்)

1.2 தேசிய அடையாள அட்டை இல. :- | | | | | | | | | | |

2. அலுவலக முகவரி :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.1 அலுவலக முகவரி :-----.
(சிங்களத்தில்/ தமிழில்)

2.2 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3. பால் :-

3.1 ஆண் -1, பெண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக) | |

3.2 பிறந்த திகதி :-----.
ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.3 விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று வயது :-----.
வருடங்கள் : | | | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

4. இலங்கை திட்டமிடற் சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தில் சேர்ந்த திகதி :-
(கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்ட சரியான திகதியைக் குறிப்பிடுக)

5. அரசகரும மொழிக் கொள்கையின் பொருட்டு நீங்கள் முன்னர் சேர்ந்தவரா அல்லது புதிதாகச் சேர்ந்தவரா ? :-----.

6. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகமாக இருந்தால் அந்த அலுவலகத்தின் பெயர்) :-----.

7. வர்த்தமானியின் 2 ஆவது பந்தியின் கீழ் நீங்கள் விண்ணப்பித்த பாடங்கள் :-
(i) :-----.
(ii) :-----.
(iii) :-----.
(iv) :-----.

8. நீங்கள் பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றுகிறீர்களா ? :--.

9. நீங்கள் பரீட்சைக்கு முதல் தடவையாக இல்லாதுவிடில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :-----.

| முழுப் பரீட்சைக்காக ரூபா 115 ஆகும். ஒவ்வொரு விடயத்திற்கெனின், ரூ. 75 வீதம் பெறுமதிக்கேற்ப முத்திரையை இக் கூட்டில் ஒட்டி கையொப்பமிட்டு பெறுமதி நீக்கஞ் செய்யவும். |
|---|

10. விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடியானவை என்றும், பெறுமதி நீக்கப்பட முன்னர் உபயோகிக்கப் படவில்லை என்றும், நான் அளித்துள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேற்போந்த ................................ குறிப்பிடப்பட்ட மொழிமூலம் இப் பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையவன் என்றும் நான் உறுதிமொழி கூறுகின்றேன்.

...............................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர், அல்லது அத்தகைய திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிட அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் அலுவலர், அல்லது தனது உள்ளூர் தலைவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

திரு./ திருமதி/ செல்வி .......................................................... எனது அலுவலகத்தில் ஓர் அலுவலர் என்றும், அவரை எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர் 2005 ஆம் ஆண்டு .......................... மாதம் .............................. ஆந் திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.

.......................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

நான்,

(i) மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டுச் சரியாக இருக்கக் காணப்பட்டன என்றும்,

(ii) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுடையவர் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

............................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

பதவிப் பெயர் :-----.
திகதி :-----.

05-97

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும்* **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.*

*5.* **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.*

*6.* **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*7.* **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

*11.* **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

*12.* **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

*13.* ***1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

***இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.***

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்ருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2006**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 05.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2006 |
| | | வியாழன் | 11.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2006 |
| | | வெள்ளி | 19.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.05.2006 |
| | | வெள்ளி | 26.05.2006 | .. | நண்பகல் 12 | வியாழன் | 11.05.2006 |
| **யூன்** | .. | வெள்ளி | 02.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2006 |
| | | வெள்ளி | 09.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2006 |
| | | வெள்ளி | 16.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2006 |
| | | வெள்ளி | 23.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2006 |
| | | வெள்ளி | 30.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2006 |
| **யூலை** | .. | வெள்ளி | 07.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.06.2006 |
| | | வெள்ளி | 14.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.06.2006 |
| | | வெள்ளி | 21.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.07.2006 |
| | | வெள்ளி | 28.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.07.2006 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.